செய்தி வெளியீடு எண். 111 நாள். 21.02.2018

**மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் 63 பயனாளிகளுக்கு ரூ.4 இலட்சத்தி 36 ஆயிரத்து 948 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்**

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.02.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 40 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 4 இலட்சம் மதிப்பிலான வங்கி கடன் மானியமும், காது கேளாத 17 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.19 ஆயிரத்து 380 மதிப்பிலான காதொலி கருவிகளும், பார்வையற்ற 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ. 1088 மதிப்பிலான பிரெய்லி கை கடிகாரமும் மற்றும் பார்வையற்ற 5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 16 ஆயிரத்தி 480 மதிப்பிலான நவீன மடக்கு குச்சிகளும் ஆக மொத்தம் 63 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4 இலட்சத்தி 36 ஆயிரத்தி 948 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார். பின்னர், மாற்றுத்திறனாளிகளிடமிருந்து 100-க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார். இம்மனுக்கள் மீது விரைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென சம்மந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.எஸ்.ஜெயச்சந்திரன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்ப திட்டம்) திரு.சீ.ஜானகிராமன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**